மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.230/2022</u>

2025ம் ஆண்டு செப்டம்பர் 10ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தமிழரசு | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>10.09.2025 வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது சொந்த ஊர் சென்னிமலை. நான் கட்டுமான தொழிலில் காண்ட்ராக்டராக தொழில் செய்து வருகிறேன். நான் காண்ட்ராக்டர் தொழில் செய்வதற்கு உரிமம் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். நான் தற்போது வெள்ள கோவிலில் வசித்து வருகிறேன். நான் வெள்ளகோவில் தங்கி உள்ளதற்கு என்னிடம் ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் ஆவணங்கள் இல்லை ஆனால் 5 வருடங்களாக வெள்ளகோவில் வசித்து வருகிறேன்.

2. நான் வாதிகளின் அப்பார்ட்மெண்டில் குடியிருந்து வருகிறேனா என்றால் ஆமாம். வாதிகளை எனக்கு எப்படி பழக்கம் என்றால் அவர் எனக்கு தூரத்து உறவினர். யார் எனது தூரத்து உறவினர் என்றால் வா.சா.ஆ.1 எனக்கு தூரத்து உறவினர். அவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் அக்கா உறவு முறை. வாதிகளின் சொத்து

சம்பந்தமான ஆவணங்களில் நான் ஏதேனும் சாட்சி கையொப்பம் போட்டு உள்ளேனா என்றால் ஒரு ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டு உள்ளேன். வாதிகளின் சொத்து அமைந்துள்ள சர்வே எண்.312/1F.

3. பிரதிவாதிகளின் சொத்து சர்வே எண்.312/1G. பிரதிவாதிகளின் பூமி வாதியின் தாவா சொத்திற்கு தென்புறத்தில் அமைந்துள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்தில் உள்ள அப்பார்ட்மெண்ட்டை நான்தான் கட்டினேனா என்றால் ஆமாம். கட்டிடத்தில் தென்புற சுவரானது வாதி சொத்தின் தெற்கு அத்திலேயே கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எவ்வளவு இடைவெளி விட்டு கட்டப்பட்டுள்ளது என்றால் ஒரு இடத்தில் ஐந்து அடியில் ஆரம்பித்து அப்படியே கிராஸ் ஆக 9 முதல் 10 அடி வரை இடைவெளி விட்டு கட்டப்பட்டுள்ளது.

4. வாதி கட்டிடத்தின் தென்புறசுவற்றில் சன்சய்டுகள் 3 அடி அகலத்தில் தென் புறத்தில் நீட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வாதியின் கட்டிடம் அமைந்துள்ள பகுதியானது வெள்ளகோவில் நகராட்சிக்கு கட்டுப்பட்டது என்றால் ஆமாம் வார்டு எண் 2 ல் உள்ளது. வாதி தனது கட்டிடத்திற்கு மனை அங்கீகாரமும் கட்டிட அங்கீகாரமும் வாங்கி உள்ளாரா என்றால் ஆமாம். வாதியின் கட்டிடத்திற்கு ப்ளூ பிரிண்ட் அமைத்துக் கொடுத்த பொறியாளர் யார் என்றால் பொறியாளர் செந்தில் அமைத்துக் கொடுத்தார். அந்த வரைபடம் வெள்ளகோவில் நகராட்சியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம்.

5. அங்கீகாரம் இல்லாத கட்டிடங்களுக்கு நான் அரசு காண்ட்ராக்டர் என்ற முறையில் கட்டிடங்களை கட்டித் தரக் கூடாது என்றால் சரிதான். வாதிகள் தன்னுடைய அப்பார்ட்மெண்ட் கட்டிடத்திற்கு

நகராட்சியில் எந்த விதமான அப்ரூவலும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் நகராட்சியில் அங்கீகாரம் பெறப்பட்டது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதையும் வாதிகள் இந்த வழக்கில் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் வழக்குரை தயார் செய்யப்பட்டபோது நான் வாதி சித்ராவுடன் உடன் இருந்தேனா என்றால் இல்லை.

6. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போதே வழக்கு சொத்தான கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது என்றால் 2018 ஆம் ஆண்டு கட்டிடம் ஆரம்பிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டது. வாதி சொத்தின் அத்து எங்கே அமைந்துள்ளது என்பதை பொருத்தும், பிரதிவாதிகள் சொத்து அத்து எங்கே அமைந்துள்ளது என்பதை பொருத்தும் சர்வேயர் மூலம் இரண்டு சொத்துக்களையும் அளவிட்டால் தெரியவரும் என்றால் ஏற்கனவே சர்வேயர் மூலம் அளவீடு செய்து அத்துக்கள் போடப்பட்டுள்ளது.

7. வாதி கட்டிடத்தின் தென்புற சுவற்றின் தென்புறத்திற்கு அடுத்து பிரதிவாதிகள் பூமியான ரீ.ச.எண்.312/1G பூமியானது ஆரம்பிக்கிறது என்று சொன்னால் சரியல்ல. வாதிகளின் காலியிடம் அங்கே உள்ளது மேற்படி நான் காலியிடம் என்று சொல்லும் பூமி 312/1G யில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அத்து விவரங்கள் குறித்து எனக்கு தெரியும் என நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

8. தாவா சொத்தில் அமைந்துள்ள கட்டிடத்தை நான் கட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிகளின் அதிகாரம் பெற்ற முகவரான சித்ரா என்பவர் எனது

உறவினர் என்பதால் அவர் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் பிரச்சனை செய்கிறார்கள் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது நானும் உடன் சென்றேனா என்றால் அக்கா மட்டும்தான் சென்றார் நான் செல்லவில்லை.

9. வாதிகள் கட்டிடத்தின் தென்புற சுவற்றில் மூன்றடி தூரத்திற்கு நீட்டப்பட்டுள்ள சன்சைடுகள் பிரதிவாதிகள் பூமியான ரீ.ச.எண்.312/G பூமியில் தான் அமைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதி சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் நான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.09.10 19:10:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்